உ.

ஓம்.

ஸ்ரீபரபரமபணேநம:

# அத்வைதரஸமஞ்சரி

இஃது

கைலாயகிரிபிரமபீடம்

விஜ்ஞானதயோகீந்திரமரபிற்குரிய

ஸம்பத்கிரி

அச்சுதானந்தஸ்வாமிகளால்

இயற்றப்பட்டு

காஞ்சிபுரம்

ஸ்ரீ திரு நாராயணசாமிமுதலியாரால்

காஞ்சீபுரம்

சந்திரபானு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

துன்முகி வருஷம் துலாரவி,

1896.

Registered Copy Right

# சிறப்புப்பாயிரம்.

இஃது.

அத்வைதவிவேகஸாராஜவித்வத்
ஜனசேகரராகிய
ம-ள-ள-ஸ்ரீ
மணிமங்கலம
திருவேங்கடஸாமி முதலியாரவர்களியற்றிய

ஆசிரியப்பா.

உலகுயிர்பரமென் றோதியவாராவங்
கலகமலாதிலை காலமோர்நான்கினுஞ்
சோதனையாதித் தொன்மரபதனால்
வாதனையிகந்த வரையிலாச்சொரூபம்
போதமேயதுநீ புகலுநானென்றதூஉம்
வாதியாதிதனை வலம்படக்காண்மினென்
றுதிமத்யாந்தமி லச்சுதப்பெரியோன்
ஓதினனுலகுய வுறுமனுபூதியை
அத்துவிதாஸ்மஞ் சரியெனவமைத்திங்
கித்துவிதப்பண் பிரிந்தேயொழிந்திட
முத்தனிவனம் முனியெனப்
புத்திசெய்துலகீர் பவந்தொலைமின்களே.

## சிறப்புப்பாயிரம்.

இஃது.

காஞ்சிபுரம் மஹாவித்வான்
ம-ள-ள ஸ்ரீ நமச்சிவாயமுதலியார் குமாரர்-
கந்தசாமிமுதலியாரவர்களியற்றிய
நேரிசை-வெண்பா.

---

அத்து விதத்திற் கருத்தம்பலவென்பார்
சித்தந் தெளிந்தின்பஞ் சேர்ந்திடவே—லத்துவித
மாகும் ரஸமஞ்சரி யச்சுதானந்த
யோகி யுரைத்தானுவந்து.

கட்டளைக்கலித்துறை.

பொய்யாமுலகப்புரட்டர்தம் புன்மதிபோக்கியொளி
செய்யாமனை முடிவாயருட்டேன்றுளிச் சீரியர்மேற்
பெய்யாருநேபதி மண்டலமுற்றிடும் பெற்றியதாம்
மெய்யாயிலகுமச்சுதவள்ளல் வியன்கவியே.

இஃது ம-ள-ள ஸ்ரீ
திருவோத்தூர் வாசி மதி பானுகவிஇயற்றிய
வெண்பா.

நிச்சலமெய்ஞ்ஞானநெறிநின்றிலங்குமாமுனியா
மச்சுதப்பேரானந்த னன்பறைநூ—லிச்சகத்தி
லெத்துவிதமுந்த விர்த்திங்கெம்மைச்சிவமாக்கு
மத்துவித வின்பக்கொத்தாம்.

## சிறப்புப்பாயிரம்.

இஃது காஞ்சீபுரம் மஹாவித்வான்

ம-ள-ள-ஸ்ரீ-நம-

கந்தசாமிமுதலியார் அவர்கள் மாணாக்கர்

கா லோ சுந்தரமூர்த்திமுதலியார்

இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

எங்குநிறைந்தேகம தாயிரவுபகலின்மை யதாயின்புற்
றோங்குஞ், சங்கரப்பேராரிய னுமாமுனிவன்வடமொ
ழியாற்றான் செய்தாற்போற், றுங்கமிகுமத்துவிதமாமிர
ஸமஞ்சரிநூற்சுருதியாற்றால், அங்கணைச்சுதந்தலைமேற்
றினனிங்கவனிகரிவ்வவனியுண்டோ.

இஃது ம-ள-ள ஸ்ரீ.

புரசை அஷ்டாவதானம்சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கர்

திருமயிலை ஷண்முகம்பிள்ளையவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தலையறிக்கின்புறப்புரியுமத்துவிதரஸமாமஞ்சரிநூன்மே
லுரைட், புனிதசங்கராசார் யமாமுனிவன்வடமொழியிற்பு
னைவித்தாற்போற், சனகனிகருந்தவத்த ச்சுததாஸப்
பேரறிஞன்றமிழ்வெண்பாவாலினிதொகுத்தன்மொழிபெ
யர்த்தீண்டுதவினன்மற்றவன்சீர்த்தியியம்பற்பாற்றோ.

இஃது காஞ்சிபுரம்
ம-ள-ள-ஸ்ரீ.
மிஷன்ஹை இஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
பு| கனகசபைநாதபிள்ளையவர்களியற்றிய
நிலைமண்டில ஆசிரியப்பா.

---

பாற்கடற்பாம்போ பனிக்கதிர்வரைப்போ
மாற்கடற்கடந்த மாதவர்மனமோ
சித்தரின் செயலோ திகழும்பரசிவ
பத்தரினர்த்தமோ பழுதில்புண்ணியமோ
யாதெனக்கூறலா மியாமெனயாவரு
மோதுதற்கொண்ணு தோங்குமோங்கலாய்க்
கவினுற்றிலகுறுஉங் கைலையங்கிரிமேல்
தவநவைகாட்சி நயம்பெறநன்கிருந்
தாமசபாவந் தழைத்திடமோதி
ப்ராரப்டத்திற் பிறங்கும்போருட்
தருநிஜானந்தன் கோதருஞ்சீத
மருமலரடிகண் மறவாமோன
சச்சிதானந்த சாகரவடிவா
மச்சுதானந்த வடிகளென்றுரைக்குந்
தனிமையிலங்கிடுஞ் சம்பத்திரிவளர்
புனிதபுலத்திய புரத்தினிற்றோன்றிச்
சாதிசமயா சாரச்சழக்காற்
பேதவாதங்கள் பேசிதிட்பலாய்

விவகரித்திடும்வெறு வீணர்களாக்கை
யவமதாமுன்ன மறிதற்கரிதாய்ச்
சடமசடத்திடைத் தானெனமன்னும்
படாருட்சோதிப் படிவமுற்றுய்வனைத்
தையயுளங்கொண்டு தானடைந்திட்ட
சுயமயானந்த சொரூபஞானத்தா
லத்துவித ரசமஞ்சரியாகும்
புத்தகமுதந்தனைப் புசித்திடப்பெய்திட
முத்தமிழதனின் முந்தியதமிழா
வித்தலமதனி லியற்றியீந்தனவே.

## வெண்பா.

வானிடையின்போல் வயங்கும்விழுப்பொருளோ
யூனுடலிற்காணருணர்ந்து வப்பஞானத்திற்
றேர்ந்தச்சுதானந்ததேசிகர் தாஞ்செய்பனுவ
லோர்ந்தச்சந் தீர்ந்தோமுளம்.

இஃது ம-ள-ள-ஸ்ரீ
அஷ்டாவதானம் வீராசாமிசெட்டியார்மருகர்
வித்வான் அப்பன்செட்டியாரவர்கள்
இயற்றிய
எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பரசிவவடிவச்சங்கராசாரியர்பகர்ந்திடுமறைமுடிமொழி,
யை, விரித்திரைப்பரப்பிலுயிர்களின்புறுவான்மேதகுமச்

## சிறப்புப்பாயிரம்.

சதானந்தன், மருவுமத்துவிதரசமஞ்சரியெனுமாகலைத்த மிழினில்வருக்கத், தனையிடைக்கச்சியடியவனொருவன் றகுதியாயச்சியற்றினனே.

---

இஃது ம-ள-ள-ஸ்ரீ

பல்லவபுரம் புராணிகர்

சோணாசலமுதலியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

விராஜிதகைலாயகிரிபிரமபீடத்தினன் போல்விளக்கஞ் செய்யு, நிராமயமாயிலகுநிஜானந்தமுனீந்திரனருளைநிகழ ப்பெற்றோன், திராவிடத்திலோதினனத்துவித ரஸமஞ்ச ரிநூற்சீவருய்வான், றராதலத்திற்கரிக்கருளச்சுதனிகராயா சிபலசாற்றலாமே,

---

இஃது

இந்நூலாசிரியர் பரம்பரையைச்சார்ந்த

சேலம்ஜில்லா இருமத்தூர் ஸ்ரீமான்

தாதப்பஸ்வாமிகளியற்றிய

பன்னிரு சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருவருள்விலாஸச்சிதாகாசமாயரியதேசோமயானந்தமா யத், திகழமலமேதையர்கடங்களனுபூதிநிலைசீருணர்ந்து

லகமுய்வா, னருமறையின்முடிவாயமெய்ஞ்ஞானநூலி னையமைந்தசெந்தமிழ்மொழியினாலருளினேனு தவுகவெ னைப்பலமுமுக்ஷுக்களாவலினுரைப்பவனம்.

பெருமையத்வைததரஸ மஞ்சரிப்பெயராற்பிறங் குமிழ்நூ லருளினன்- பிரமபீடத்தலைவனு நிஜானந்தமுனிபேரு ளடைந்தபெரியோன்-குருவளரெழின்முடிவெசிட்டாதி முனிவர்போற்கோதறுதபோதன்னியன்- குவலயம்புகழ்ச் சுதானந்தனிவன் மகிமைகூறவரிதாகுமாதோ.

---

இஃது.

காஞ்சீபுரம் ஐ திரு. ம-ா-ா ஸ்ரீ.

நாராயணசாமிமுதலியாரவர்களியற்றிய

ஆசிரியப்பா.

திருவருட்சோதிச் செழித்திடமாயா
கருவரித்தோற்றங் கண்ணசித்திலகுறு
முத்தானுபவ முழுதும்பெறவொரு
சத்தியகலைசெந் தமிழினிலாக்கி
இன்பளித்திடுகென் றிணையடிப்போதை
யன்பர்களுடி யடைந்திடவனைக்
கைக்குவமிபின் சாத்திரளா

அத்துவிதசமயந் தரிசெய்தருளினன
சிட்டரிறைஞ்சுநந் திருக்கடம்பூர
வட்டமிசையுறும வரஞானகன
மொழிப்பதயபுகழும் புனிதநாயகன
பற்பலநூலதும் பகர்வாமேயபு
முன்னிலைக்கமலென நெருந்மொழிபுனைவார
மன்னவாயிலினோர் பண்டைத்திறத்தனா
தலைக்கிளின்மிக்காய்க் கலையுத்தமோது
புலத்தியபுரமுன் புத்தலத்தாலய
சச்சிதானந்த சாகரமென்னும
அச்சுதானந்த வாரியன்றனே.

---

இஃது இவ்வாசிரியர்மாணாக்கராகிய சதனபுரி
ஸ்ரீமான்.
இராமசந்திர குருசாமிதாஸரியற்றிய
(எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

விண்டவழுந்தனது நெடுங்கோட்டின்மீதா
வியன்றருமோர்ச்சுடர் விளங்கும்விழுப்பத்தானுங்
கண்டவடியாமவித்தைதக்கங்குன்மாயக்
கைதொழுதேத்திச்சிவமாக்கருதலானுந்
தண்டவளர்த்து கினைவரைமுதற்கைசலங்க
டங்கணங்கத்துலங் கருணைசலந்தனருப்பண
கொண்டவளஞ்செறிந்த நாட்டினிமேலோருர்சீர்
தலவுபுலத்திய புரமென்றிலதுமாதோ.

அத்தலைகயநன்னகரினனி மிக்கூற்ற
னமரமலவேங்கடசாமியெனுந்தோன்றல்
லெத்தலைகயவுத்தமருமெய்சற் கொண்டு
விருந்தவத்தாலீன் றெடுத்தோனிருடரின்ப
மித்தலைகயதென் றுணாத்து நிஜானந்தன்றாட்
கியானனைதென்பனவளித்தோனிகலின்மேலோன்
முத்தலைகயதீத வகண்டானந்தங்கொண்
மோனனெமதச்சுதமெஞ்ஞானன்றானே. ௨

உலகநிறைமன்பனைதநல்லின்பந்துய்ப்பா
னுணர்ந்தளவிற் கிருபையினென்வடநூறன்னி
லிலகரியதாற்பரியம் பிறழாவண்ண
மெழிற்றமிழ்த்வை தாலமஞ்சரிப்பேர்
நல்கலையாயமைத்தளிப் பப்புகழ்சேர்கச்சி
நகர்நாராயணசாமி நவையின்றெருங்குப
பலகலையுந்தேர்றிவான லமாயச்சிற்
பதிப்பித்தா னெமையுநனி மதிப்பித்தானே. ௩

ஸ்ரீபரப்ரம்ஹணேநம:

# அத்வைதரஸமஞ்சரி.

## காப்பு.

### நேரிசைவெண்பா

பொன்மயமல் லாதயலாப் பூடணமில் லாதவிதஞ்
சின்மயமல லாதுசக சீவபர-மின்மையினை
வாதமற வோதிடுமத் வைதரஸ மஞ்சரிக்குப்
போதபரி பூரணங் காப்பு

(இ-ள்) சுவர்ணத்தினதுருவமாக விளங்குவனவாகிய வாபரணங்கள், சுவர்ணத்திற்கன்னியமாக வில்லாதவாறுபோன்று சிதாத்மகமாகிய பரப்பிரமத்திற்கன்னியமாகச் சகசீவபரங்கள் அணுத்துணையுமில்லாமையாகிய வனுபூதிநிலையினைப் பேதவாதங்கணீங்கும்படிக்குப்பிரதிபாதியாநின்ற இந்தஅத்வைதரஸ மஞ்சரியென்னுநூலினுக்கு மேற்கூறிய மெய்ஞ்ஞானஸ்வரூப பரிபூரணவஸ்துவானது காப்பாவதாக. (எ-று)

### ஸ்வரூபஸ்துதி.

சுட்டத்தகாத சுகாதீதப் பேரொளியைத்
தட்டத்தனிப்பொருளைத் தண்ணருளைத் - துட்டற்ற
வேதாகஸ்யாற்புதத்தை விண்விழுங்கும்விண்ணை யெம
தாதாரத்தைப் போற்றுதல்செய் வாம

(இ-ள்) இவ்விதத்தினதெனச் சுட்டிக்காட்டற்கேலாத ஆனந்தாதீதயகண்டசோதியைத், தனக்கெனயாதொருதுணையுமின்றிய தனிமையாகியவஸ்துவை, குளிர்ந்தகிருபாமூர்த்தியை, நிலையகன்ற வேதத்தினந்தாங்கமாகிய வாச்சரியத்தை, பரவெளியையும் விழுங்காநின்ற வெளியை, எம்முடையவனு பாகிய தெய்வத்தினை யிறைஞ்சுவாம், (எ-று.)

### மஹான்கள்வணக்கம்.

மனத்துறுசங்கற்ப மயமாகுந் தால
மனைத்துமகண் டாகார மாக்கித்-தினைத்துணையு
மன்னியமோ ராதுபர மானந்த மானவர்தாள்
சென்னியணிந் தேத்துவதெஞ் சீர்

(இ-ள்) மனதிற்றோன்றாநின்ற சங்கற்பரூபமாகியஜகமொருங்கு மகண்டாகார பரப்பிரமமாக்கித் தினையளவேனுமதற் கன்னியமாயொன்றுளதாகக்கருதாது, அந்தப்பரமானந்தவஸ் துவேதாமாகி விளங்காநின்ற மஹான்களது திருவடிகளை யெமது முடிக்காபரணமாகவணியப்பெற்று, துதிபுரிவதே சிறப் புடைத்தாம், (எ-று)

## நூல்

ஆடியறைநாப்ப ணகப்படுசே யங்குமிங்கு
மோடியதர்காணா துழல்வது போற்-பீடிலகு
யான்மநெறியெய்தாம லல்லினுறைபுல்லியர்க
ளென்மருணீத் தெய்துவர்வீ டிங்கு

(இ-ள்) கண்ணாடியினாலமைக்கப்பட்ட சிறுவீட்டினுள் ளகப்பட்டுக்கொண்ட சிறுவனொருவன் அவ்விடத்துமிவ்விடத்து மோடி வெளிப்படுமார்க்கங்காணாது வருந்துவதுபோன்று பெருமையோடு பிரகாசியாநின்ற பரமாத்மானு சந்தானமார்க்கத்தையடையாதவர்களாகி, அஞ்ஞானாந்தகாரத்திற் சஞ்சரியாநின்றவற்பர்களாயினோர், இவ்விடத்துத்தமது மருளையொழித்து நிர்வாணபதத்தையேனடைவார்கள்? அடையார்கள். (எ-று) 1

கபவடாரநகானிலுழல் காவலனோராப்த
னுரைவழியாற்றன்னா டுறலபோற்-குருவருளாற்
சத்தியமாந்தன்னிலையைச் சார்வார்கள் சாதனசம்
பத்தியுடை யுத்தமரிப் பார்

(இ-ள்) கள்ளாற்காட்டின்கண்விடுக்கப்பட்டு மார்க்கமறியாது மனமாழ்கித்திரியுமொரு[illegible] தனக்கெதிர்ப்பட்ட வோராப்தனுரைத்தவழியைக்கொ[illegible] தனதுதேசத்தைச்சேர்தல் போன்று, ஞானாசாரியனுக்கிரகத்தினால் யதார்த்தமாகிய தமது சொரூபநிலையினை, யிவ்வுலகின்கண் நித்தியாநித்தியவஸ்து, விவேகமுதலிய சாதனசதுட்டய சம்பத்தினையுடைய வுத்தமர்களடைவார்கள். (எ-று) 2

அன்னையினலம்பரத்தா லற்பவிரா தேயத்வங்
கன்னனகன் றோராசாக் கண்டதுபோற்-றொன்மறையு
நீசுரூபமென் னுமங்ங னின்றாற் பசுத்துவம்போய்த்
தேசுருமீ சத்துவமாந் தேர்

(இ-ள்) தனதுமாதாவாகிய குந்திதேவியினாலும், ஆடையினறிகுறியினாலுந் தனக்குற்றவிழிவாகிய யிராதேயத்துவமகன்று, கர்ணராஜன் றன்னையொருமன்னனாகக்கண்டுகொண்டாற்போன்று, பழமையாகியவேதங்களும், நீசொரூபம் எனக்கூறுநிற்கும்; அங்ஙனமேயிடையறாதுநிலைநின்று குருமுகமாகப் பழகின், ஆரோபமாகிய சீவத்துவங்கழன்று அதிஷ்டானப்பேரொளியாகிய சிவத்துவந்தடையின்றியெய்தும், இதையாராயக்கடவாய். (எ-று) 3

வந்திக்கொருமதலை வாய்த்ததிக வைபவத்தோ
டிந்தவுலகாண்டிறந்தா னென்பவர்போன்-மந்தர்
அவிகாரமாயிலகு மான்மாவுக்கேனோ
விவகாரங்கற்பிப்பார் வீண்.

(இ-ள்) மலடியாகிய மாதினுக்கோர் மைந்தனுற்பவித்து அத்தியந்தவைபவத்தோடிவ்வுலகமொருங்கு மாசாக்ஷிபுரிந்து தேகவியோகமாயினான் எனக்கதைகட்டிப் பேசுமவர்களைப் போன்று, மந்தாதிகாரிகள், நிர்விகாரமாய் விளங்காநின்ற பரமான்மாவிற்கு, வியர்த்தமாக விவகாரசீவசேட்டைகளைக் கற்பிப்பார்கள். இஃதேனோ? (எ-று) 4

இருளிற்கா ணெல்லாம்பே யென்றஞ்சு மேழைக்
கொருநற் றீபங்கிடைத்தஃ தோய்ந்த-பரிசேவருஞ்
சஞ்சலமா நோக்கிற் சகமுள் ளகமுகமா
யெஞ்சாது நோக்கிடினஃ தில்.

(இ-ள்) கங்குலின்கட் டோன்றாநின்ற பொருள்களைத் தங் கழுதுகளெனக்கருதிப் பயமெய்துமறிவிலியாமொருவனுக்கு, அக்கணமேயோர் பெருந்தீபங்கிடைத்து அந்தப்பயநிவாரணமாகியவண்ணம், இயாவரும் பகிர்முகத்திற்சாஞ்சலியமனத்தினராய்நோக்குங்கால் சகஞ்சத்தியமாயுளதாகும், அந்தர்முகத்திற்குறைவுறாது சாஞ்சலியராஹித்தியவறிவினராய் நோக்குங்காலஃதிலதாகும். (எ-று) 5

மருளாவிரச்சுவிலா மாசுணத்தோற் றந்தான்
றெருளாலின் றாக்கயிறே தேறும்-பரிசாத்
துருக்கந்தருமுலகத் தோற்றமொருபோதுந்
திருக்கல்லா லின்றாந் திடம்.

(இ-ள்) சித்தப்பிராந்தியினாற் கயிற்றின்கண் ணாரோபிக்கப் பட்ட சர்ப்பத்தோற்றமானது, விசாரத்தெளிவினாலின்றாகிக் கயிறுமாத்திரமாகவே தேறுமாறு, கலக்கத்தைத்தாராநின்ற பிரபஞ்சத்தோற்ற மோர்காலத்துந்திருக்காகிய வதிஷ்டான மன்றியின்றாகும், இதுதிண்ணமாம். (எ-று) 6

காதறருஞ்சுத்திகையிற் கண்டவெண்டாதாலெவரு
மாதனிகராச்செழித்து வாழலாம்-வீதலொடு
சம்பவமில்லாப்பிரம சந்நிதியிற் கற்பிதமா
மம்புவிதான் மெய்யாமா னால்

(இ-ள்) நாசோற்பவங்களில்லாத பரப்பிரமசந்நிதியிற் கற்பிதமாகிய பிரபஞ்சமானது, மெய்ப்பொருளாகுமாயின், அவ்விளைவிளக்காநின்ற கிளிஞ்சலினிடத்து, கற்பிதமாகித்தோன்றும் வெள்ளியினாலும், யாவருமஹாதன சம்பன்னர்களாய்ச் செழிப்புற் றுய்யற்காகும். (எ-று) 7

இந்திரசாலம்பொய்யென வெல்லோரு மோர்ந்துமதைப்
புத்திமகிழ் வாக்காண்டல் போற்றெளிவாச் சிந்திக்கின்
முன்னுமின்றிப்பின்னுமின்றி முன்னவிருமிந்நிலத்தின்
றன்னிலையுங் காண்பருயர்ந் தார்

(இ-ள்) விநோதத்திற்குரிய விந்திரஜாலமென்னும் வித்தையானது, மித்தையென்றனைவருமுணர்ந்திருந்தும், அதனையுள்ளக்களிப்பினோடுற்றுப்பார்ப்பதுபோலத், தெளிவாகச்சிந்தனை செய்யுங்கால், சிருட்டிக்குமுன்னரும், பின்னரும், இல்லாததாகியும், இடையே யிங்ஙனம் நமது முன்னர்விளங்காநின்ற விந்தப்பிரபஞ்சத்தினது நிலைமையையும், மித்தையென்றறிந்தும் விநோதமாகக்காண்பார்கள் மஹான்கள். (எ-று) 8

கண்ணேயுறுமாந்தர் காணுங்காலொன்றாய
விண்மேயபொன்மதியம்வெவ்வேறா-கண்ணுதல்போ
னற்பிரமமொன்றேயுண் ணாடார்க் குலகாதி
பற்பலவாக் காணப் படும்.

(இ-ள்) நேத்திரரோகபீடிதராகிய மானிடர்கள் ஆகாயத்திற்பொருந்திய வொள்ளியவேகச்சந்திரனைக்காணுங்கால், அது வெவ்வேறுரூபங்களாகப் பார்வைக்குக் கிட்டுவதுபோன்று, நலமிகுந்த பரப்பிரமமொன்றே, அந்தர்முகநாட்ட முறாதார்க்குச்சகமாதியாகிய பற்பலபொருள்களாகத் தோன்றாநிற்கும்.

வெள்ளத்தின் வேகத்தான் மேவும் பெருஞ்சுழிகள்
வெள்ளம்போனாற்போம் விதம்போல-மெள்ளச்
சொரூபநிட்டை வந்தெய்திற் றொல்லுலகர் சேட்டை
யரூபமுற்று விஸ்ராந்தி யாம்.

(இ-ள்) சலப்பிரவாகவேகத்தினாலதிற்பொருந்துவனவாகிய பெருஞ்சுழிகள், அந்தப்பிரவாக நிவர்த்தியாகுங்கால் அதனோடுகூடவே லீனமாகப்போமாறுபோன்று, இடையறாது மெல்லப் பழகு மந்தர்முகப்பழக்கத்தினால் சொரூபநிட்டைவந்தடையாநிற்கும். அங்ஙனமாயின் அந்நிட்டாபலத்தினால், உலகநடைக்குரிய பொய்ச்சேட்டைகள் முழுதும் ரூபமில்லாதனவாகி விஸ்ராந்தியாம். (எ-று)

விரிவாயவிண்ணகத்தின் மேவுங்கந்தர்வ
புரியொண்மின்னுவிரிதல் போன்மெய்க்-குருவருளான்
ஞானோதயமாகு ஞான்றுசிதா காயமதி
லானசகத்தெல்லாம்பொய் யாம்

(இ-ள்) : விசாலமாகிய வாகாயத்தின் கண்ணாரோபமாகப் பொருந்தியகந்தர்வ நகரமானது, ஒள்ளிய மின்னலினால் முற்றுங் கெடுதல்போன்று, உண்மையாகியவாசாரியனது திருவருளினால், மெஞ்ஞானோதயமாகுங்காலத்துச் சிதாகாயத்தின் கண்ணாரோபமாகிய பிரபஞ்சமனைத்து மித்தியாசொரூபமாம்

மாற்றலரைப்பாகனைத் தன்மன்னவனைக்கொன்றுதனித்
தேற்றமடைந் தேகுமத யானையைப்போற்-றோற்றமுறு
மித்தலத்தைப் பற்றுகசை யேதுமிலாமற்கெடுக்கின்
சித்தஞ் சிவமயமாந் தேர்

(இ-ள்) யுத்தகளத்திற்றன்னெதிரெய்திய பகைஞரையும், தனதுபாகனையும், தனதரசனையும், கொலைபுரிந்து அதனான் மேன்மையுற்று, மறிப்பாரின்றித்தனித்தேகு மதகஜத்தைப் போன்று, நித்தியமாகத்தோற்றுநின்ற, இவ்வுலகத்தினைப்பற்று மவாவேது மில்லாம னசிக்கச்செய்யின், அங்ஙனஞ் செய்தோனது நின்மலசித்தமானது சிவாகாரமாகத்திகழும். இதை நீயாராய்க்கடவாய். (எ-று) 12

கடந்தோன்றி னுங்கெடினுங் காணரியவானுங்
கடரும்வி ருத்தியுட னனி-தொடராவா
னத்துவிதா னந்தர்க் கருந்தாபத் தாலவிரண்
டெய்திறத்தா னுஞ்சேரா வே.

(இ-ள்) கடமானது உற்பத்தியாயினுங் கெடினுங் காணுத ற்கரிதாகிய மகாகாயத்திற்கு நெருங்கிய வுபாதியினால் விருத் திக்ஷயங்களனைத்துமணுகாவாறுபோன்று, அத்வைதா னந்தசாட்சாத்காரம் பெற்றோர்க்கு, நீங்குதற்கரிதாகிய தாப த்திரயங்களால் அவ்விருநிலைமைகளு மெவ்விதத்தானு மணுகு வன வன்றாம், (எ-று) 13

காமுகன்றன் சொப்பனத்திற் கண்டவெழின்மங்கை
[யின்மேன்
மாமயன்மேவும்வகைபோன் மாநிலத்திற்—பாமரர்க
டங்கட்குண்ணித்தியமுஞ் சத்தியமாக்காதலிப்பார்
சங்கற்பரூபசகத்தை.

(இ-ள்) காமுகனானவன், றனதுசொப்பனவத்தையிற் கண் டவழகியவோரரிவையின்மீது மகத்தாகிய மோகத்தைப்பொ ருந்துமாறுபோன்று, பிரபஞ்சத்தின்கணுள்ள பாமரராயினோர் தமதுள்ளத்திற் சந்ததமுஞ் சங்கற்பரூபமாகிய சகத்தைச்சத் யமாயிச்சியாநிற்பார்கள் (எ-று) 14

இன்பாதீதப்பொருளா மெம்பாலிற் கற்பிதமா
யின்பாகத் தோன்றுலக மெம்மையலா-லின்றாயும்
பேச்சிற் கயலாகும் பெற்றியுளதாத் தோன்று
மாச்சரியமென் சொல்லலாம்.

(இ-ள்.) சுகாதீதப்பொருளாகி விளங்கா நிற்கும் எமது சந்நிதானத்திற் கற்பிக்கப்பட்டு, சுகம்போற்றோன்று மிவ்வுலகமானது, எம்மையன்றி யன்னியமாயின்றாயும், சொன்மாத்திரத்திற் கன்னியமாந் தன்மையுளதாகித் தோன்றுமற்புதத்தை யென்னென் றெடுத்துரைக்கலாகும். (எ-று) 15

சித்திரஞ்சேர் வத்திரத்தைச் சித்திரங்கண் மூடினுமவ்
வத்திரம்பொய்யாகாத வண்ணமருஞ்-சித்துருவை
மாயாரூபங்கண் மறைப்பினு மஃதெஞ்ஞான்று
மோயாதபேரொளியன் றோ

(இ-ள்) நானாவிதசித்திரங்களெழுதப்பெற்றுள்ள வத்திரத்தை யச்சித்திரங்கண் மறைப்பினும், அதுபற்றி யவ்வத்திரமானது மித்தையாகாதவாறு, சிற்சொரூபத்தை மாயாகாரியமாகிய விசித்திரவடிவங்கண் மறைப்பினும், அச்சொரூபமானது யெக்காலத்து மெதனாலுமொழிவின்றிவிளங்கும் அகண்டசோதியாமன்றோ? (எ-று) 16

மேனிலையாத் தூர்க்கந்த மேவுமலப் பொய்யுடலை
யாமிதைத் திர் சிக்குமட மாந்தரைப்போற்-றூனை
தன்மயமாகுஞ்சச்சி தானந்தங் காமுறுவர்
நின்மலசித்தத்தினர்க ணோர்.

(இ-ள்) உலகின்கண் சகித்தற்கொண்ணாத் தூர்க்கந்தம்பொருந்திய அமேத்தியபூரிதமாகுமிந்த மித்தியாசரீரத்தை, மேலாய நிலையினதாக விச்சியாநின்ற மூடசனங்களைப்போன்று, தானேதானாகும் சற்சொரூபசச்சிதானந்தத்தைக் கிரமமாக நிர்மலசித்தத்தைப்பொருந்தியவிவேகிகள் விரும்பாநிற்பர். (எ-று) 17

சுத்தபுனற்போற்பொய்யாத் தோன்றுங்கானற்புனனீத்
தொத்தபுனலைப்பருகுமுத்தமர்போன்-மித்தையொழித்
தெண்ணரிய பூரணமா மின்பவெளத் தாழ்ந்திடுவார்
புண்ணியமெய்ஞ் ஞானிகளென் போர்.

(இ-ள்) பரிசுத்தசலம்போன்று பொய்ம்மையாகத்தோன்றுகின்ற கானற்சலத்தையொழித்து, தாபந்தணித்தற்குரிய சலத்தைப்பருகாநிற்குமேலோர்களைப்போல, சன்மார்க்கசுகிர்தபரிபாகிகளாகிய மெஞ்ஞானிகளெனப்படுவோர், தேகாதிபிரபஞ்சமாகியமித்தையனைத்து மொழித்து, நினைத்தற்கரியபரிபூரணானந்தப்பெருக்கின்கண் ணழுந்தாநிற்பார்கள். (எ-று) 18

பொங்குமொளியாற்றிகழும் பொற்பகலைக்கூகையினங்
கங்குலெனக்காலங் கழித்திடுமோ-திங்குநிறை
மெய்ச்சுடரைப் பட்சமுடன் மேவாதகந்தாவாளா
விச்சகத்தோர் செய்தொழிலென் னே.

(இ-ள்) மிகுந்தபிரகாசத்தோடு விளங்காநிற்கு மழகியபகற்காலத்தைக் கூகைக்கூட்டமானது, இராக்காலமெனக்கருதிக் காலங் கழிக்குமாறுபோன்று, எவ்விடத்தும்பரிபூரணமாய் நிறைந்துள்ள வுண்மைப்பொருளாகிய பரஞ்சோதியைப் பிரியமுடனடையாது ஐயோ! வீணாகவித்தப்பிரபஞ்சத்தினர் செய்யுஞ்செய்கையென்னேயோ? (எ-று) 19

விளக்கொளியாற்றன்னிழலை மேவிடநோக்குஞ்சே
யுளக்கலக்கங்கொண்டலறுமாபோ-லளக்கரிய
வானந்தந்தன்னிலுலக ன்னியமாக்கண்டறிவி
லீனர்நிலைகின்றவியப் பென்.

(இ-ள்) தீபப்பிரகாசத்தினாற்றனது தேகச்சாயையைச் சுவராதிகளின்மேற்பொருந்தக்கண்டசிறுவனொருவன், சித்தப் பிரமைகொண்டு அதனோடுழலுமாறுபோன்று, அளத்தற்கரிதாகிய பிரமானந்தத்தின்கண் ணதற்கன்னியமாக வுலகமுளதெனக்கண்டு அவிவேகிகளாகிய வற்பர்களதற்காக வுழைக்குமதிசயமென்கொலோ? (எ-று) 20

சலசதளத்தைத்தகன தாரைகளொட்டற்றுப்
பலமிலவாம்போலவோர் இதத்தபாலு-மிலகுபர
மா[illegible]யைவாயையிரு[illegible] பூதம்பொறிகள
[illegible]ருமெக்காலு[illegible].

(இ-ள்) கமலபத்திரத்தை மேகதாரைகளானவை, பற்று தற்சங்கி யில்லாதனவாகுமாறுபோன்று, சர்வசா[illegible]ங்க ளுள்ளும் புறம்பு மகலாது பரிபூரணமாய்விளங்கும்பரமான்ம வை, மாயையினாற் கற்பிக்கப்பட்ட பிருதிவியாதிபூதங்களுட நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், எண்பத்துநான்கு [illegible]சீவராசிகளாய் விரிந்துள்ளபௌதிகங்களும், பூதபௌ[illegible] யத் வர்த்தமானங்களென்னுந் திரிகாலங்களினும், என்பற்[illegible] வாகும்? (எ-று) 2

ஆகின்றியின்னீலநிற மற்பழுமில்லாத விதத்
மாயிலசங்கான்மாவா யாண்பினர்பாற்-பேசுமிடத்
தின்னாருமபொல்லாவிராகமுதலாங்குணங்கண்
மன்னவிலையென்றே மதி

(இ-ள்) ஆகாயத்தின்கண்ணற்பமேனுங்கருநிறமில்லாமை போன்று, குற்றமற்றநிஸ்ஸங்க வான்மஸ்வரூபமெய்தாநிற்கு மாகஷிமை யுடையோரிடத்துச் சொல்லுங்கால் துன்பந்தரு கேதுவாகிய கொடியராகத்துவேஷாதிகுணங்கள் பொருந்த தலில்லையென மதிப்பாயாக. (எ-று) 2:

காலவிகற்பத்தாற் கடுங்கட்செவியுடலிற்
றோலகலுமாபோலச் சொன்முடிவா-மேலான
வானந்தமாயிலகு மான்றோர்பால் மூன்றவத்தை
போனவழி தோன்றாமற் போம்,

(இ-று) காலவேறுபாட்டினாற்கொடிய சர்ப்பத்தினுடம்பிற்சருமங்கழலுமாறுபோன்று,சுருதிவாக்கியாந்தமாகிய வுத்கிருஷ்டானந்தமே சொரூபமாய்விளங்காநின்ற மெய்ஞ்ஞானிகளாகிய மேலோர்களிடத்து சாக்கிராதியவத்தாத்திரயங்கள் நீங்குமார்க்கந்தோன்றாவாறு நீங்கும். (எ-று) 23

நனவுங் கனவுமென நாமமுரணல்லா
லனவையிரண்டும்மாயையாம்போற்-கனபிரமங்
கூடத்தனென்னுமிவை கூடச்சமாதிநெறி
நாடத்தனித்தலைமை நாம்.

(இ-ள்) சாக்கிரமெனவும், சொப்பனமெனவும், அபிதானதாரதம்மியமேயன்றி, அவ்விரண்டும் ஒக்க மாயாகாரியமேயாகும். அதுபோல,பெருமைபொருந்திய பிரமசைதன்னியமும், கூடஸ்த சைதன்னியமுமாகிய வபிதானதார தம்மியமகன்று, வஸ்துவைக்கியமாத்திரங்கூடவியன்ற நிரசமாதியாகுநெறியிற்சேர, நாமவ்விரண்டுமெல்லாத வொப்பற்ற ஸர்வாதிஷ்டானப்பொருளாய்விளங்குவம். (எ-று) 24

புறக்கருவியுட்கருவிப் புணர்சனங்கள் நின்ப
மிறைக்குநிஜானந்தமதாய் நின்றோர்-மறைக்கியையத்
தூங்காமற் றூங்குந் துயிலினைநீங் காருலகி
லொங்காப் துறுந்தொழில்க ளால்.

(இ-ள்) பாஹ்யேந்திரியங்களாகிய சுரோத்திராதிகளுடை
யவும், அந்தரேந்திரியங்களாகிய மனாதிகளுடையவும், தன்
நீங்கிச்சுசபூரணமாக்கும்நிஜானந்தமே தாமாகப்பழகாநின்றோ
ர்கள், சுருதிப்பிரமாணத்திற்கியைந்தவண்ணம், பிரபஞ்சத்தா
கங்குபொருந்துஞ்செயல்களினாற் றூங்காமற்றூங்குந் தூக்க
நிலைநீங்கார்கள். (எ-று) 2.

பங்குவரைத்தோடன் மதியமைசந்தோடலெனுத்
தங்குமருட்குனக்குடையார்சாற்றுதல்போ-லெங்குநிறை
கொண்டிரு பரவெளியைக்கூடினர்பேற் றோடமுரைத்
தெள்ளுவதா லாகுமடமென்

(இ-ள்) மேருமலையைசலித்தோடுவதைச் சந்திரன்சலித்தோ
டுகின்றதென்று, பொருந்தியமருட்பார்வையுடையார் புகலுவ
துபோன்று, எவ்விடத்தும்பரிபூரணமாகப்பிறங்கும் பரவெளி
யேதாமாக, வதன்கண்ணிரண்டறக்கலந்துய்யு மேலோர்கண்
மீது குற்றங்கூறியிகழ்தலினால், அன்னோர்க்குண்டாகுந்துன்ப
மியாது? (எ-று) 26

சொப்பனத்திற் கைம்மா துரத்தத் துயிலொழிந்தோன்
அப்பயத்தைப் போக்கிக்கொண்டாற்போல-வெப்பொ
மேலாம்நிஜானந்த மேவினருக் காணியிலை [ழுது
சாலத்தோற் றட்டுஞ் சகம்.

(இ-ள்) சொப்பனாவத்தையிற்றன்னையோர் யானைதுரத்து வதாகப்பிரமித்து, சாக்கிரமுற்றோனாகியபுருடன் அப்போதே யந்தப்பிரமையை நீக்கிக்கொண்டாற்போல், அனவரதமுஞ் சிறந்தநிஜானந்தமடைந்துள்ள மகான்களுக்கியாதொருநட்ட முமின்றாம். ஆதலி னிந்தச் சகமிகவுந் தோற்றினுந் தோற் றட்டும். (எ-று) 27

தூய்மையுறுமாடியினிற்றோன்றுமுக மித்தையென
வாய்ந்தவருமன்னதைக்கண்டாச்சரிய-மெய்வதுபோற்
றோன்றுலகமித்தையெனாச் சோராமற்கண்டுணரு
மான்றோருங் காண்பாரென் றாய்

(இ-ள்) பரிசுத்தம்பொருந்திய கண்ணாடியின்பாற் றோற்று கின்ற பிரதிபிம்பானனமானது, பொய்யென் றாராய்ந்திருப் போர்களும், அந்தவானனத்தையேநோக்கி வியப்படைவது போன்று, தோன்றுகின்ற ஜகமும் மித்தையெனச்சோர்வின்றி க்கண்டறிந்த மேலோருமதை யங்ஙனமே காண்பாரென்று ராய்தி. (எ-று) 28

காயெழுப்பியன்னங் கருத்தோறுந் துஞ்சலிற்சொல்
வாயுரையே லாமறுயின்மாறுமற்-சேயுளால்போற்
பூதலத்திற்பொய்ப்போகம் புல்லுகினுநல்லறிஞர்
போதமகலாருட் புறம்.

(இ-ள்) பெற்றெடுத்தவன்னையானவள் பிரியமுடனெழு
பிச் சாதமூட்டுந்தோறுந் தூக்கத்திலவளினியவாய்மொழி
யைச் செவிக்கேற்றுக்கொள்ளாமலுந், தனது தயின்மாறுமலுங்
குழவியுண்ணுங் கொள்கைபோன்று, இப்பூதலத்தின்கண் த
மைப் பொய்ப்போகங்கள் வந்து பொருந்தினும், மேலோர்க
ள் தமது மெய்ப்போத முள்ளும்புறம்புமகலாத நிலையினரா
விளங்குவார்கள். (எ-று) 29

தீவாந்தரத்தினனித் தீவின்சீ ரித்தீவின்
மேவுமவனத்தீவின் மெய்ச்சீரோ-ராவகைபோன்
மெய்ஞ்ஞானியோரான் விடயசுக மெய்ச்சுகத்தை
யஞ்ஞானி யோரா னகம்.

(இ-ள்) அயற்றீவின்கணுறையுமொருவன், இத்தீவின்கட
செல்லுஞ்சிறப்பினையும், இத்தீவின்கணுறையு மொருவன்
அயற்றீவின்கண் ணிகழுமுண்மைச்சிறப்பினையுமுணராவாறு
போன்று, உளத்தின்கண் மெஞ்ஞானி விடயானந்தஞ்சற்றுமு
ணரான், அஞ்ஞானிப்ரஜ்ஞானந்தங்கிஞ்சித்துமுணரான். (எ-று) 30

சுக்கிலபட்சந்தொடங்கத் தோன்றுமதியின்கலைக
ளொக்கநிறைந்தாரிருளை யோட்டுதல்போல்-மிக்கவரு
செல்வத்தைப் பெற்றோர் சிதம்பரமாகித்திகழ்வார் [ட்
தொல்வினையாங் கங்கு றொலைந்து

(இ-ள்) சுக்கிலபக்ஷமாரம்பிக்க வதனோடுதிக்குஞ் சந்திரனது கலைகளானவை நாளுக்குநாளொக்குமாறு, நிறைவுற்றுப் பொருந்திய விருளைப்போக்குதல்போன்று, மேலாயதிருவருளென்னுஞ் சம்பத்தையடைந்தமகான்கள் சிதாகாயசொரூபமாகித்திகழ்வார்கள், பழயவினையாகியவிருளைநீங்கி. (எ-று) 31

சிற்புருட னாற்றாகந்தீருதற்கா யௌடதங்கோ
ணற்புருடன் றீம்புன லுண்ணாவா-றற்புதமாஞ்
சொல்லரிய வானந்தச் சோலையினின் மூழ்குமவர்
அல்லறருங் கன்மமணு கார்.

(இ-ற) அணிமாதியஷ்டசித்திகளையுங் குறைவறப்பெற்று விளங்குமொரு சிற்புருடனாற் றன்றாகத்தைத் தீர்த்துக்கொள்ளற் கவுடதமுட்கொண்ட விவேகியாகியபுருடனானவன், அதன்பின்னரினியதீர்த்தத்தையேனும் பருகற்கணுகாவாறு, ஆச்சரியம்பொருந்திய சொல்லுதற்கரிய வகண்டானந்தமென்னும் விடாமழையினின் மூழ்கு முயர்ந்தோர்கள் துன்பத்தையே யுதவாநின்ற கன்மங்களையணுகார்கள். (எ-று) 32

அட்டவித மாஞ்செல்வ மாருமா சன்பொழுதை
யிட்டமுடன் வட்டாடி யேயொழித்து-விட்டிடல்போ
மாண்பாருமானந்த மன்னியமெய்ஞ் ஞானியருந் [ன்
காண்பார் சகந்தனையோர் கால்.

(இ-ள்) அடிமை, இராஜாங்கம், சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகனம், ஆகியவெண்வகைச்செல்வமும் பொருந்திய ஓரரசன், பிரியத்துடன் வட்டினாட்டமாடிக் காலங் கழிக்குமாறுபோன்று, மாட்சிமைபொருந்தியவானந்தநிறைந்த வுண்மைஞானிகளும், இந்தவுலகத்தினை யெவ்வோர்காலத் ததிசயமாகக் காண்பார்கள். (எ-று) 33

தொழிலியற்றாச் சோம்பனுக்கோர் தோன்றலிதேநல்ல
வழியெனக்கேட்டின் புறல்போல்வாய்மை-மொழிம
மேதமறச்சும்மா விருப்பதுவே யின்பமென [றையு
வோதவதே யேற்றனரான் றோர்.

(இ-ள்) யாதொருகிரியையும் புரியாது வாளாகிடக்குஞ் சோம்புளானுக்கு, ஓரரசனு மிஃதே நன்மார்க்கமாமென் றுரைக்கக்கேட்டு அவன் றனக்கிதவாக்கியங் கூறியதற் குளங்களித் தல்போன்று, சத்தியமே யுரைசெய்யாநின்றசுருதிகளும், அந்தக்கரணாதிசேட்டைகளாகிய குற்றங்களனைத்து நீங்கச் சும்மா விருக்குநிலையே சுகநிலையெனப்போதிக்க வதனையே மேலோர்களுஞ்சிரசாவகித்தனர், (எ-று) 34

மணிமுடிமா ராசனுக்கிம் மாநிலத்தோ ராரும்
பணியிடவே லாதவிதம் பாரிற்-றணிவிலின்ப
வாரிதியிற் றோய்ந்தரிய வான்பொருளாச்சஞ்சரிப்போ
காரெதையே னுஞ்சொலவல லார் [ர்க்

(இ-ள்) இரத்தினகிரீடம்புனைந் துலகமனைத்தும் பரிபாலியாநின்ற,ஓர்பெரியவரசனுக்கு இந்தமகத்தாகியஜகத்தின்கணுள்ளார்யாரும், யாதொருதொழிலினுந் தூண்டற் கியையாதவண்ணம் பூதலத்தின்கண் தணிதலில்லாதவானந்தசாகரத்தின் மூழ்கிச் சொல்லுதற்கரிய பரம்பொருளாச் சஞ்சரியாநின்ற மகான்கட்கு எந்தநிலையேனும் இங்ஙனமாயதெனக்கூறற் குரியவல்லுநர்யாவருளர்? ஒருவருமிலர். (எ-று) 35

மிக்கமழையால்வெயிலான்மேவுமுவர்மண்விதைக்குத்
தக்கவிலா பாலாபஞ் சாராவா-றெக்கலைக்கு
மெட்டாதபேரின்ப மெய்தினருக் கின்பதுன்ப
மெட்டாவெத்தீவினையா லும்.

(இ-ள்) மிகுந்தமழையினாலும், வெயிலினாலும், களர்நிலத்திற்றூவப்பட்ட விதைகட்குத் தகுதியாகிய நயநஷ்டங்களிரண்டுமெனுகாவாறுபோன்று, எத்தன்மையநூல்களுக்குமெட்டற்கரியபேரானந்தமடைந்திலங்கு மேலோருக்கு மெங்ஙனமாய தீயகருமங்களினாலுஞ் சுகதுக்கங்கள் பற்றுவாம். (எ-று) 36

ஆட்டுவான் கைக்குள் ளகப்பட்ட நாகமவன்
காட்டுமதைநீக்கற்கா காவிதம்போல்-வாட்டுமருந்
துக்கம்புசித்துத் தொலைத்திடுவா ரன்றியருண்
மிக்கவரும் போக்கார் விதி.

(இ-ள்) ஆட்டப்பட்டவன் கையினி லகப்பட்டவானராமானது, அன்னோன்கையாற்காட்டுந்தொழிலைப்புரியாது வொழித்தற்கேலாதவாறுக, வாடச்செய்யாநின்ற அரிய துன்பங்களை யனுபவித் தகற்றுவார்களல்லாமல், திருவருட் பூர்த்தியுடையோரும் பொருந்தாநின்ற விதியைப் போக்கிக்கொள்ளற்கேலார். (எ-று) 37

ஓரூர்வழியறிந்தோ னூடணுகுமார்க்கமெலாஞ்
சேராதவ்வூரடையுஞ் செய்கைபோற்-சீராகத்
தம்மைத்தா முய்த்துணர்ந்த தாபதர்க ளூழ்புசித்து
மிம்மைக்கண் டுன்புறுத லில்.

(இ-ள்) ஒருகிராமத்தினதுமார்க்கம் நன்குயுணர்ந்திருக்குமொருவன், அவ்விடத்திற்கேகும்போது இடையிற்சந்திக்கும் பலவழிகளினுஞ்சாராது, தான்குறித்தவூரினையேசேருஞ் செயலினைப்போன்று, செம்மையாகத் தம்மைத்தாமாராய்ந்தறிந்த தபோதனர்கள் ஊழ்வினையை யனுபவிக்கினும், இவ்வுலகின்கண் அனுத்துனையுந் துன்புறுதலின்றாம். (எ-று) 38

வல்லவன்றன் மாற்றூனல் வன்றுயரமெய்தினுந்தான்
வெல்லவினைந்தத்துயர மேவான்போ-னல்லறிஞர்
சங்கற்பபீதியினைச் சாரார்களுட்புறம்புந்
தங்குமருணோக்காற் சதா.

(இ-ள்) போர்வல்லோனாகியவொருவன் றனதுசத்துருவினால் வலியதுன்பத்தைப்பொருந்தினானாயினுந்,தானவனையெவ்விதத்தினுஞ்செயித்தற்குத்திடமாக நிச்சயித்துத் தனக்குண்டாகியவந்தத்துயரத்தையோர்பெரிதாக மனதின்கண்ணடையாமை போன்று, சிறந்தஞானிகள் சங்கற்பமாகியபயத்தினை யுள்ளும் புறம்பும் பொருந்திய திருவருட்பார்வையினாற் சந்ததமுமடையார்கள். (எ-று) 39

மானினிவேடந்தரித்த வஞ்சனுள வாய்ந்தவிடனேனு மவனைப்புணரற் கெண்ணான்போ-னிலத்தின்
அற்புதங்கண்மித்தையென வாய்ந்தகல் வைராக்கியர்க
சொற்பமுநச் சாரவற்றிற் றோய்ந்து. [ள்

(இ-ள்) பெண்வேடம்பூண்டு வஞ்சிக்கவந்த ஓர்புருடனது மருமமுணர்ந்தான் விடபுருடனானவனாயினுந்,தானவ்வேடதாரியையணைதற்கு நினையாவண்ணம்போல, இந்தப்பூதலத்தினற்புதங்களனைத்தையும் பொய்யெனவாராய்ந்தறிந் தகன்றவிரகிகளாகிய மேலோர்கள், அவற்றின் மூழ்கிக் கிஞ்சித்துமிச்சியார்கள். (எ-று) 40

பொருளின்மையாற்பிசுனன் போன்றவுதா ரற்கோர்
பெருநிட்சேபங்கிடைத்தப் பெற்றி-யொருவுதல்போற்
சுத்தபரிபூரணமாய்ச் சொல்லிறந்த நல்லறிஞர்
சத்தியமென் றெண்ணார் சகம்.

(இ-ள்) தருமம்புரிவதற்குரிய திரவியங்கைகூடாமையினா
ல் உலோபகுணமுடையோனை யொத்திருக்கு முதாரியாகிய
வொருவனுக்கு, ஓர்மகத்தாகிய புதையல்கிடைத்து அந்தக்கு
ணமகலுமாறுபோன்று, நின்மலபரிபூரணவஸ்துவாகி வசனமற்
று விளங்காநின்ற மெஞ்ஞானியர்கள் பிரபஞ்சத்தை யுண்மை
ப்பொருளாகக்கருதார்கள். (எ-று) 41

ஞானஞ்ஞானங்களிலை நன்றில்லை தீதில்லை
வானசானொடேந்தே வாசியிலை—கோனும்
பதியும்பசுவுமிலை பாசமிலையின்ப
நிதிதாமானோர்க்கன் னியம.

(இ-ள்) பரிபூரணசுகநிதியாகிய பரம்பொருளோடு இரண்
டறக்கலந்து, அதுவே தாமாகிவிளங்காநின்ற மெய்ஞ்ஞானி
கட்கன்னியமாக ஞானமு மஞ்ஞானமுமின்றாம்; நன்மையுந்
தீமையுமின்றாம்; உயர்வாகிய வாசாரியனுஞ் சீடனுமின்றாம்.
சர்வாதிபத்தியமுடையோனாகிய ஈசுவரனுஞ், சீவனும், பாச
முமின்றாம். (எ-று) 42

அத்வைதரசமஞ்சரி